Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00


# ஈழநாதம்


THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 24 (07-03-1992) சனிக்கிழமை ஓசை: 18

## பாடசாலை மாணவர் தினமும் உடற்பயிற்சி

யாழ். மாவட்டத்தின் சகலபாடசாலைகளிலும் தினமும் காலையில் பதினைந்து நிமிடங்கள் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும் என யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். மாணவர்கள் மத்தியில் உடல், உளவளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கும் உடற்பயிற்சிஅவசியமாகின்றது. எனவே (6-ம்பக்கம் பார்க்க)





கட்டைக் காட்டில்நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்ட வீர வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதை முதலாவது படத்திலும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒருதொகுதியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ராணுவத்திற்கு ஏற்படும் பேரிழப்பு

# அரச வட்டாரங்களில் அதிர்ச்சி

## குழப்பிய நிலையில் போர்முறைத் திட்டம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அண்மையில் அதிகரித்துள்ள விடுதலைப்புலிகளின் தாக்குதல்களினால், சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள கூடுதலான உயிரிழப்பும், ஆயுததளபாட இழப்பும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான பல தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும், பெருமளவு ஆயுதத்தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றியதும் தெரிந்ததே. கடந்த புதன், வியாழன் ஆகிய இரு நாட்களில் மட்டும் குறைந்தது 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அதிகரித்த இராணுவத்தினரின் உயிரிழப்பே அரசாங்கத் தரப்பில் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் இராணுவத்தினரின் மனோ நிலையைப் பாதித்துள்ளதாகவும் இராணுவம் யுத்தத்திற்கான மனோ நிலையைப் படிப்படியாக (6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் போரிட இராணுவத்திற்கு உதவியாக 16,000பொலிசார்சேவையில்

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிடும் இராணுவத்திற்கு துணையாக 16, 000 பொலிசாரை அனுப்பப் போவதாக சிறிலங்காவின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏர்ணஸ்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின்கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கே இவர்கள் அனுப்பப்படுகின்றனர் என்றும்,

இவர்களுக்கு கெரில்லாதாக்குதலில் இருந்து தம்மை காத்துக் கொள்ளுவதற்கு விசேட இராணுவப் பயிற்சி அளிக்கப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று காங்கேசன் துறைமுகம் திறப்பு

காங்கேசன்துறைதுறைமுகப் பகுதியில்இருந்துஉணவுப்பொருள்களை எடுத்துவரும் பரீட்சார்த்த முயற்சியாக இன்று முதல் தடவையாக சர்வதேச (6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காட்டில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

கட்டைக்காட்டில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்றஉக்கிர மோதலின் பின் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது மேலும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட மேலதிக ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ.கே.எல்.எம் ஜி ரவை லிங்குடன் - 306
- ★ ஐ.எம்.ரவைகள் - 604
- ★ ரி-56 மகசீன் - 05
- ★ ரி-81 மகசீன் - 02
- ★ சப்பாத்து - 15
- ★ ஏ.கே.கோல்சர் - 02
- ★ ெகல்மற் - 07
- ★ கிற் பாக் - 02
- ★ குப்பை விறாண்டி - 02

## கட்டைக்காட்டில் வீரச்சாவடைந்த மாவீரர் புகழுடல்களுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

கட்டைக்காட்டில் நேற்று முன்தினம் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற உக்கிரமோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மூன்று வேங்கைகளினதும் புகழுடல்கள் நேற்று சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன அத்துடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன

இம் மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட (6 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்ணினமே, எழுச்சிகொண்டு எழு!

# அடக்குமுறையை உடைத்தெறிவோம்

## விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அறைகூவல்

(நமது நிருபர்)

"தமக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளைச் சகித்துக் கொண்டு விதியே என்று வாழ்வது பெண்ணுக்கு வேண்டாம் என்பதனையும் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்து போராடி விடுதலையைவென்றெடுக்க வேண்டியது பெண்களின் கடமை என்பதனையும் வலியுறுத்தும் நாளே சர்வதேச மகளிர் தினமாகும்''

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர்முன்னணி ''உயிர்ப்புடன் எழுவோம் உரிமையை மீட்போம்'' என்ற தலைப்பில் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

பெண்ணினத்திற்கு எதிரான அடக்குமுறையை உடைத்தெறிய எழுச்சி கொண்டு எழு. மாறு அந்த அறிக்கையில் மகளிருக்கு அறை கூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

பெண்ணினத்தின் ஆற்றல்களை வியப்புடன் உலகு நோக்குகின்ற யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் ஆனாலும் பெண்ணின் பிறப்புரிமையை முற்று முழுவதுமாக ஏற்றுக்கொள்ளும் நாகரிகத்தை இன்னும் உலகம் முழுவதும் அடைந்துவிடவில்லை. உலகளாவிய ரீதியில் பெண்களின் நிலைப்பாடு இது (5 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளம் ஊடாக போக்குவரத்துக்கள் ஒரு வாரகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளி (6 ஆம் பக்கம் பார்க்க)

உனது 5-ம் ஆண்டு நிறைவில் எமது விழிகள் சிந்தும் அஞ்சலி

உனது 2- ம்ஆண்டு நிறைவில் உனக்கு எமது கண்ணீர் மாலை





## மேஜர் கேடில்ஸ்

(மகாலிங்கம் திலீபன் கண்டாவளை)

தாய்மடியில்
14- 05- 1965

தமிழீழ மண்அடியில்
14- 02- 1987

## மேஜர் காண்டீபன்

(மகாலிங்கம் காண்டீபன் கண்டாவளை)

மாதாவின் கண்ணுக்காக
14- 06-1970

நாம்வாழும் மண்ணுக்காக
07- 03- 1990

களங் கண்டாய் சினங் கொண்டாய் நொடிப்பொழுதில் பகைவென்றாய்
மனங்கொண்டாய் தமிழீழ விடுதலையின் முனைப் பானாய்
துடிதுடித்த உன்கரத்தில் துவக்கை ஏந்திப் பொடிப் பொடியாய் எதிரிகளை
தவிடு பொடி ஆக்கி நின்றாய் மேஜர் காண்டி உன் புகழின் பெருமைதனை
சொல்லுகின்ற இதழ்களெல்லாம் இனிப்பெடுக்கும் நெஞ்சினிலே வீரம்பாய்ச்சும்
சிங்களத்தின் படைகளுக்கோ குலைநடுங்கிக் காய்ச்சல் ஆக்கும்
உன் அண்ணன் மேஜர் கேடில்ஸ் வழியினில் நீ நடை நடந்தாய் வீறு கொண்டாய்
வாசமுறும் வாடாத மல்லிகையாய் எம்இதய அறையில் இன்று வாழுகின்றாய்.

அப்பா, அம்மா, அண்ணன், செல்வி, அக்கா றாயிஜினி, தங்கைமார், பாமினி காயத்திரி, உற்றார், உறவினர், நண்பர்கள்.

சி4009

## பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம் (வ/து)
## வெங்காயம் விற்பனை

எம்மிடம் தரமான வெங்காயம் விற்பனைக்கு உண்டு. அதனை பெற விரும்புவோர் எமது சங்கத்தில் நேரில் பார்வையிட்டு தங்கள் விலைக்கூற்றை 15.03.92 ந் திகதிக்கு முன் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

பொதுமுகாமையாளர்
பருத்தித்துறை

05.03.1992. (சி/4015)

## மெய்வல்லுநர் போட்டி

வண்ணை நாவலர் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9 00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெற இருக்கின்றது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதம் அவர்கள் கலந்து கொள்கிறார்.

## கேள்வி அறிவித்தல்
## தனியார் பாதுகாப்புச்சேவை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கிளிநொச்சி விவசாயபீடத்தில்பாதுகாப்புச்சேவையை மேற்கொள்வதற்கு சிவில்பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள தனியார் பாதுகாப்பு முகவர் அமைப்புகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கோருகின்றது.

கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 250/- ஐயும் மீளளிக்கப்படும் வைப்பான ரூபா 2500/- ஐயும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுகளைச் சமர்ப்பித்து 1992-03-31 ஆம் திகதி நண்பகல் 12-30 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியாளர் 24 மணித்தியாலமும் விவசாய பீடத்திலுள்ள 3 காவல்நிலைகளையும் காவல் புரிவதற்கு பதவியினரைத் தொழிலில் அமர்த்தத் தயாராகஇருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதிவாளருக்கு 1992-4-6 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கேள்விச் சபைக்கு உண்டு.


-பதிவாளர்

(சி/4013)


DLH உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது
உங்களின் நண்பன்
DHL தபால் சேவை
D. H. L. INTERNATIONAL
C/o Cosmos Marketing Services
120, (200) K. K. S. Road,
Jaffna.
DHL WORLDWIDE EXPRESS
(சி/4014)


சொயிலாமனையை பிறப்பிடமாகவும் வரணி இயற்றாளையை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய கிருஷ்ணசாமி நமசிவாயம் (வேலு) அவர்கள் அகால மரணமடைந்த

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



தாய்மடியில்
08-4-1955

இறையடியில்
08-12-1991

## கிருஷ்ணசாமி நமசிவாயம் (வேலு)
## நினைவுகளில் நிறுத்துகிறோம்

எம்மிதயம் கொள்ளை கொண்ட அன்பனவன்
எம்மை எல்லாம் ஏங்கவைத்து காத்திராத வேளைதனில்
காலனவன் கயிறெறிந்து கவர்ந்து சென்ற சேதி கேட்டு
காலமது கெட்டிருக்கும் வேளையிலும் வீடுவந்து
சோகமுற்ற பேர்களுக்கு ஆறுதலைத் தந்தது -ன்
ஓடி ஓடி பற்பலவாய் உதவி செய்து - இது
காலவரை சேர்ந்து வந்து கடன்களிலும் பங்கு கொண்ட
பாசமுள்ள பரிதமுள்ள சொந்தமுள்ள சுற்றமுள்ள
யாவர்க்கும் எம்மிதய அன்புதனில் தோய்த்தெடுத்த
நன்றிதனை சாற்றுகிறோம்

வரணி இயற்றாளை,
வரணி.

இப்படிக்கு
மனைவி - றஞ்சி
மகன் - றமேஷ்
உற்றார் - உறவினர்
நண்பர்கள்

(2270)

## நினைவு கூருகின்றோம்
## 1992-03-07

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை, வினாயகபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**அசோக்** [தம்பியப்பா சித்திரவேல் - தாண்டியடி, திருக்கோயில், அம்பாறை]

யாழ். கோட்டை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**துஷ்யந்தன்** [தங்கவேலாயுதம் ஜெயக்குமார்- பொலிகண்டி, வலவெட்டித்துறை]

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர் பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**மேஜர் காண்டீபன்** [மகாலிங்கம் காண்டீபன் - கண்டாவளை]

1991 ஆம் ஆண்டு தச்சன் காட்டில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மௌலி** [தம்பிராசா தங்கேஸ்வரன் -வெல்லாவெளி மட்டக்களப்பு]

மங்களவோயாவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**அகிலன்**

கீரிமலையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**காராளசிங்கம்** [முருகேசு யோகராசா - சங்கத்தார் வயல், இயக்கச்சி]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**


(சி/4012)

# வரிப்புலிப்படையொரு சரித்திரம் படைத்தது

05.03.92 அன்று அதிகாலை கட்டைக்காட்டு முகாமிலிருந்து வெளியேறிய சிங்கள இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலின்போது எதிரிகளிடம் இருந்து பலஆயுதங்கள் அள்ளி எடுக்கப்பட்டன. பல கவசவாகனங்கள் அழிக்கப்பட்டன. பதினைந்து எதிரிகளின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. தரை, கடல், ஆகாயத் தாக்குதலுக்குள்ளும் மூன்று வீரவேங்கைகளை இழந்து புலிகள் புதிய புறநானூறு ஒன்றை எழுதினர்.




லெப்டினன்ட்
**கலைஞன் (நித்தியா)**
(சின்னப்பிள்ளை பாஸ்கரன்)
(இத்தாவில் - பளை)
வீரப்பிறப்பு: 14 . 09 . 1972



லெப்டினன்ட்
**வேந்தன் (வின்சன்)**
(அமிர்தநாதன் அலஸ்ரின்)
(செம்பியன் பற்று)
வீரப்பிறப்பு: 01 . 05 . 1970

கொட்டும் குருதிச் சேற்றில் குளித்து
குளிர்ந்து போனீரோ -- தலைவன்
கொள்கை சுமந்து கொடிகள் சுமந்து
மண்ணில் புதைந்தீரோ
கட்டைக்காட்டில் காட்டிய வீரம்
காவியம் ஆனதம்மா -- நீங்கள்
காட்டிய பாதையெம் கால்கள் நடக்கும்
கனவும் நனவாகும்



**வீரபாண்டியன் (யூலியட்)**
(இம்மானுவேல் தெய்வேந்திரன்)
(குருநகர் தொடர்மாடி)
வீரப்பிறப்பு: 27 . 11 . 1974

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## கடற்படையிடம் சிக்கிய 121 மீனவரின் விபரம்

(நமது நிருபர்)

சிறிலங்கா ராணுவத்தினராலும் கடற்படையினராலும் கடந்த வருடங்களில் கைது செய்யப்பட்ட நூற்றி இருபத்தொரு மீனவர்களது பெயர் விபரங்கள் கூட்டுப்படைத் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களின் பெயர் [விபரங்கள் நேற்றைய எமது பத்திரிகையில் வெளிவந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

கணபதிப்பிள்ளை நவரத்தினம் தாளையடி, வேலுசாமி தவேந்திரன் தாளையடி, ஞானப்பிரகாசம் லோகிலா ஜெயசீலம் மாதகல், குமாரசாமி ஞானசேகரம் தாளையடி, நாகரட்ணம் ஜெயராசா இராசாவின்தோட்டம் யாழ்., கெஸ்மின்யோல்ற் ராஜ்குமார் சலேசியர் யாழ்ப்பாணம், பாக்கியநாதன் அன்ரன் கொழும்புத்துறை, இரத்தினம் சுப்பிரமணியம் தொண்டமானாறு, மகாலிங்கம் பொன்னுத்துரை அல்வாய் வடக்கு, செல்வகதிரமலை செல்வமனோகரன் பொலிகண்டி, வேலும் மயிலும் மதிவண்ணா வல்வெட்டித்துறை, பிலோமி நாதர்விக்ரர் அருந்தவராசா பொலிகண்டி, காந்தலிங்கம் அருமைத்துரை பொலிகண்டி, நடராசா இராஜேஸ்வரன் கெருடாவில், பொன்னம்பலம் சந்தசாமி, பொலிகண்டி, முத்துசாமி சோமசுந்தரம் தலைமன்னார், கந்தசாமி பிரேமதாஸ் வல்வெட்டித்துறை, கந்தசாமி குலவீரசிங்கம் பொலிகண்டி, யாக்கப்பர் சிந்தா பல்லவராயன் கட்டு, சந்திரலிங்கம் அருணாசலம், பவலோகசிங்கம் மனோகரன் இளவாலை, கிருஷாந்த அரியரட்ணம் இளவாலை, இராசையா நேசராசா இளவாலை, பிரான்சிஸ் செலிநீக்கிலஸ் இளவாலை, பிரஞ்சிப்பிள்ளை கிறிஸ்தோபர் இளவாலை, ஆசீர்வாதம் மரியசீலன் இளவாலை, இளையதம்பி யோகராசா அல்வாய், செபஸ்தியான் ஏபன் குருநகர் யாழ்., சேவியர் ராஜினி குருநகர், மக்ஸ் சீமன் ராஜன் குருநகர், செய்யதுபாபு ராஜீதீன் குருநகர், அகஸ்தீன் ஜீலியஸ்பாலர் குருநகர், எறோஸி பிரான்சிஸ் யாழ்ப்பாணம், சிங்கராசா கொன்ஸ்ரன்ரைன் குருநகர், கிறிகேசி ஜோன்சன் குருநகர், மகாலிங்கம் லக்சுமிகண்ணா வல்வெட்டித்துறை, கனகசுந்தரம் அழகன் வல்வெட்டித்துறை, துரைசாமி சிவசோதி வல்வெட்டித்துறை, மொகமட் சரீப்உறீசெயின் யாழ்ப்பாணம், சிங்காரவேல் சிவஞானசுந்தரம் பருத்தித்துறை, கந்தசாமி கண்ணன் மாதகல், துரைபாண்டியன் ரவீந்திரன் மதுரை, சிவசாமி சோதிநாதன் இலுப்பைக்கடவை மன்னார், வரதராசா மகேந்திரராஜா மூளாய் நவரட்ணம் ஞானரட்ணம் பொலிகண்டி மேற்கு, கதிரவேலு யோகேஸ்வரன் தாளையடி சௌக்கியன் ஜேசுராசா சிறுக்குளம் மன்னார், நடராசா ராஜ்குமார் எட்வின் ரகு அல்வாய், சிவலிங்கம் வசந்தகலாதன் அல்வாய், கிறிஸ்ரோபிள்ளைவோல்ற்றர் குருநகர், தோமஸ் பிலிப்நேனிஸ் குருநகர், மரியநாயகன் கட்டியப்பா குருநகர், அகர்சாமி பாமர் தமிழ்நாடு, இம்மானுவேல் செல்வம் சாயதாஸ் தவராஜா குருநகர், தமேன்பிள்ளை குயிற்றன் அமரதாஸ் குருநகர், ஜேமின் குயின்றஸ் குருநகர், கதிரவேலு இரவீந்திரன் திருநெல்வேலி யாழ், சுப்பிரமணியம் குசீந்திரன் தெல்லிப்பளை அருளானந்தசாமி இராமகிருஷ்ணன் இன்பருட்டி அல்வாய், ஐயாத்துரை ஆனந்தராஜா அல்வாய், துரைசாமி சந்திரலிங்கம் பருத்தித்துறை, அப்துல்ரகீம் ஜலால்தீன் பல்லவராயன்கட்டு' தங்கராஜா ஜெயக்குமார் சுதுமலை மானிப்பாய், முத்துக்குமார் உதயகுமார் தமிழ்நாடு சிவகுரு செல்லத்துரை வல்வெட்டித்துறை, ஐயாச்சாமி செல்வத்துரை மாங்குளம், செல்வதாசன் இந்தியா, நெப்போலியன் சூசையா மாதகல், துரைசாமி புஸ்பராஜா பருத்தித்துறை, கைத்தான்பிள்ளை சூசைப்பிள்ளை மாதகல், இராமகந்தசாமி தேவதாஸ் தாளையடி, சுப்பிரமணியம் சிவபாலன் தாளையடி, செல்வமாணிக்கம் அப்புத்துரை பருத்தித்துறை, பொன்னன் இராசதுரை காரைநகர்.

மேற்படி பட்டியலில் கைது செய்யப்பட்ட 121 பேரது முழுப்பெயர், விலாசம் கைது செய்யப்பட்ட இடம், திகதி போன்ற விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றில் ஐந்து பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவை தெளிவின்மையால் வெளியிடமுடியவில்லை. இவர்கள் பற்றிய விபரங்களை அறிய யாழ். அரசாங்க அதிபர் கொழும்புடன் தொடர்பு கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்,
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணிக்கும்
காண்பிக்கப்படுகின்றது.

FIVE FOR HELL
(நரகத்திற்கு ஐவர்)
(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]



வடபிராந்திய பொதிசுமக்கும் வாகன சங்கம்

முக்கிய அறிவித்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது பூநகரியில் அகப்பட்ட வாகனங்களை எடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆதலால் அந்த வாகனங்களின் உரிமையாளர்கள் அதற்குரிய பதிவுப் புத்தகத்தை சங்க காரியாலயத்தில் உடனடியாக ஒப்படைக்கவும்.

வ.பி.பொ.சு. வாகன சங்கம்
37/2 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
(மஸ்கன்ஸ்க்கு அருகில்)

(2263)


வர்த்தக ரீதியில்

## அமெ. ராணுவ சாதனங்களை பாகிஸ்தான் கொள்வனவு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு, பிரஸ்லர் சட்டத்தின் கீழ் அமெரிக்க அரசின் ராணுவ உதவி நிறுத்தப்பட்டு விட்டபோதிலும் பெருமளவு ராணுவ சாதனங்களை அமெரிக்காவிடம் இருந்து வர்த்தக ரீதியில் பாகிஸ்தான் வாங்கியுள்ளது என அமெரிக்கப் பாரளுமன்றத்திடம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரகம் தெரிவித்துள்ளது.

1991ஆம்ஆண்டுநிதியாண்டில் மொத்தம் இரண்டுகோடியே இருபதுலட்சம் டொலர் மதிப்புள்ள இராணுவ சாதனங்கள் வர்த்தகரீதியில் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும்,

1992 ஆம் ஆண்டு நிதியாண்டில் எண்பது கோடி டொலர் மதிப்பிற்குரிய ராணுவ சாதனங்கள் பாகிஸ்தானுக்கு விற்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்லர் சட்ட திருத்தம் அரசாங்கங்களுக்கும்மானியங்களுக்கும் மட்டுமே பொருந்துமென்றும் வர்த்தக ரீதியில் விற்பதற்கு பொருந்தாது என்று புஷ் நிர்வாகம் அண்மையில் அறிவித்திருந்தது.

## இந். பாராளுமன்றம் முன் இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம

(டில்லி)

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர் புதன் புதுடில்லியில் பாராளுமன்றக் கட்டடத்தில் பிரதான நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

விலைவாசிகள் உயர்வைக் கண்டித்தும், பொருளாதாரக் கொள்கையை வகுப்பதில் இந்திய அரசு உலக வங்கியின் பணிப்புரைகளுக்கு அடிபணிந்து விட்டது என்று தற்றம் சாட்டியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பல மாநிலங்களிலிருந்து வந்திருந்த இடதுசாரிக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினரும் புதுடில்லியில 'போர்க்கிளப்பில்' பேரணி ஒன்றை நடத்தினர்.

பாராளுமன்றத்தில் இருசபைகளிலும் கூட இந்தப் பிரச்சினை இடம் பெற்றது. இரு அவைகளிலும் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட விவாதத்தில் அரசின் பொருளாதாரக் கொள்கை உலகவங்கி மற்றும் சர்வதேச செலாவணி நிதியத்திடம் சரணடைவதாக உள்ளது என்று எதிர்க் கட்சியினர் தரிவித்தனர்.

## தொழிற்கல்வி ஆசிரியர் 500 பேர் தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழகம் முழுவதும் உயர்நிலைப்பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த சுமார் 500 தொழிற் கல்வி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 150 பேர் பெண்கள்.

வியாழனன்று சென்னையில் இவர்கள்கல்வியலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர். பகுதிநேர ஆசிரியர்களான இவர்கள் தங்கள்பணியை ஒழுங்கு படுத்தி நிரந்தரமாக்க வேண்டும் என்று பேராடுகின்றார்கள்.

## மாக்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தடை உத்தரவை மீறித் தமிழ் நாட்டில் பலபாகங்களில் கடந்த புதன் சிழமை ஆர்ப்பாட்டம் செய்தபோது கைது செய்யப்பட்டார்கள். மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை, வரவு செலவுத் திட்டம் விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்தே இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

தமிழ் நாடு முழுவதும் 3,000 பெண்கள் உட்பட 40,000 பேர் கைது செய்யப்பட்டதாக மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மநிலக் குழு வெளியிட்ட செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## பிரசவ லீவு 111 நாள்கள்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு நூற்றுப்பதினொரு வேலை நாள்கள் பிரசவ லீவாக வழங்கப்படும் என்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. சனி, ஞாயிறு, போயா மற்றும் அரசாங்க விடுமுறை தவிர்ந்த பன்னிரண்டு வாரங்கள் பிரசவகால விடுமுறை பெண் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## 30 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன்

(கொழும்பு)

சீனா சுமார் 30 கோடி ரூபா வட்டியில்லாக் கடனை சிறிலங்காவுக்கு வழங்க முன் வந்துள்ளது.

இபபணம் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா சிறிலங்காவிற்கு அதிக ஆயுதம் விற்பனை செய்யும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## கொள்ளை சந்தேக நபர் கைது

(கொழும்பு)

யாழ். மாவட்ட எம். பி. சிறிநிவாசனிடம் பணத்தைக் கொள்ளையடித்தசந்தேக நபர் கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபரிடம் இருந்து பணத்தின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தபால் சேவை மே. முதல் மாகாண சபைகளிடம்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் முதல் தபால் சேவை மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. உத்தியோகத்தர்களின் தரங்களும் குறைக்கப்படவுள்ளது என கொழும்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மேலும் தெரிய வருவதாவது; தபாற் திணைக்களத்தின் வேலைகள் எதிர்வரும் மே மாதம் முதல் மாகாண வாரியாக பரவலாக்கப்படவுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொருவர் வீதம் ஒன்பது உதவித் தபாலதிபர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் அவ்வப் பகுதியின் தபால் சேவைகளுக்கு இவர்களே பொறுப்பாக விருப்பர். கொழும்பினால் செய்யப்பட்ட வேலைகள் இவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திலுல் இருக்கும், தாபலகங்கள், உபதபால் அலுவலகங்கள், ஏஜென்சி தபாலகங்கள் ஆகியவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு அந்தந்த மாகாணத்திலுள்ள உதவித் தபால்மா அதிபரிடம் விடப்படவுள்ளது: எனவும் தெரிய வருகின்றது.

## அனைத்துலக மகளிர் நாள் இலக்கியப் போட்டி முடிவுகள்

அனைத்துலக மகளிர் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் அனைத்துலக மகளிர் நாளான மார்ச் 8ம் நாள் இரவு 8.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் வழங்கப்பட உள்ளன

### கவிதைப் போட்டிக்கான முடிவுகள்:-

முதலாமிடம்: றூபி மார்கிறட் பரப்பங்கண்டல் மன்னார்.

இரண்டாமிடம்: நா.மனோன்மணி கருவேலன் கண்டல் ஒட்டுசுட்டான்.

மூன்றாமிடம்: இராஜி சண்முகநர்தன். கெருடாவில் சாவகச்சேரி.

### சிறுகதைப் போட்டிக்கான முடிவுகள்:-

முதலாமிடம்: செல்வி வேணி சின்னத்தம்பி வினோத் வீதி, மட்டுவில் தெற்கு

இரண்டாமிடம்: செல்வி கிறிஷா யொவித்தா யேசுதாசன் 65/13 மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்

மூன்றாமிடம்: சி. சிவராஜினி சண்டிலிப்பாய்.

நூலகம் ... யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

துன்பத்தால் தாக்குண்ட போது, உயர்வு மேலும் உயரும் என்ற உண்மையை அறிந்தேன்!
இதுவே இன்னல் இழைத்த நன்மை!
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 07-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2301
த. பெ. எண் 03

# 'அபார சக்தி படைத்த விடுதலைப்புலிகள்'

"அரசியல் தீர்க்க தரிசனத்தை தலைகீழாக மாற்றிவிடும் அபார சக்தி படைத்தவர்கள் புலிகள். தமிழ்நாட்டில் பின்தளங்களை இழந்துவிட்டமையினால் விடுதலைப்புலிகள் பலவீனமடைந்து, செயலிழந்து விடுவார்கள் என அரசியல் விமர்சகர்கள் கருதினார்கள். ஆனால், விடுதலைப் புலிகளோ இலங்கையின் எல்லாமுனைகளிலும் திடீர் அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள்" இவ்வாறு பிரபல இந்தியப் பத்திரிகையான 'புரன்ட்லைன்' கருத்து வெளியிட்டுள்ளது.

'புரன்ட்லைன்' பத்திரிகையின் இக்கருத்தானது விடுதலைப்புலிகளின் தீவிர நடவடிக்கைகளினால், இந்திய, சிறிலங்கா இராஜதந்திர வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தையே காட்டுவதாகவுள்ளது. ஆனால், இவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பம் கடந்த காலத்திலும் சரி, தற்பொழுதும் சரி விடுதலைப் புலிகளையும், அதன் தலைமைத்துவத்தையும் சரியாகக் கணிப்பிடவில்லை என்பதையே காட்டுகின்றது.

ஆரம்பத்தில், இந்தியாவும், தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தவறாகவே கணிப்பிட்டது. டில்லியில் இருந்த இராஜ தந்திரிகளும், அரசியல் வாதிகளும் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தமது இஷ்டத்திற்கு வழி நடத்தலாம் என எண்ணியிருந்தனர். இந்தியாவின் 'புயபல பராக்கிரமத்திற்கு' தென்னாசிய நாடுகளே அஞ்சும்போது இரண்டு ஆயிரம் பேரைக் கொண்ட, சிறிய தானியங்கி ஆயுதங்களை மட்டுமே கொண்டுள்ள விடுதலைப் புலிகள் எம்மாத்திரம் எனக் கணிப்பிட்டனர். இந்தியா காலால் இட்டதை இலங்கைத் தமிழர் தலையால் செய்வார்கள் என இந்தியா கருதியது.

சிறிலங்கா இராஜதந்திரிகளும், அரசியல்வாதிகளும் இதேபோன்றே கருதினார்கள். விடுதலைப் புலிகளுக்கும்-இந்திய இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட போருடன் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விடுவார் என எண்ணினர். இதன் மூலம் இந்தியா - சிறிலங்கா சமாதான உடன் படிக்கையினால் சிறிலங்கா இராஜதந்திர வெற்றியீட்டியதாகப் பெருமிதப்பட்டார்கள்.

ஆனால் நிலைமை வேறாக இருந்தது. இறுதி மூச்சுவரை அந்நிய இராணுவம் எதுவாக இருப்பினும், போராடியே தீருவோம் என்ற புலிகளின் முடிவும், அரசியல் சதுரங்கத்தில் புலிகளின் காய் நகர்த்தலும், இந்திய இராணுவத்தினரதும், இராஜதந்திரிகளினதும், அரசியல் எதிர்வு கூறல்களை எல்லாம் தலைகீழாக மாற்றின. இந்திய இராணுவமும், இராஜதந்திரிகளும் தோல்வியை ஏற்றுகதான் ஆகவேண்டும் என்ற நிலையை உருவாக்கின. சிறிலங்கா இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தின.

இதேபோன்றே தற்போதைய நிலை தொடர்பாகவும், சிறிலங்கா, இந்தியா இராஜதந்திரிகளின் அரசியல் தீர்க்க தரிசனங்கள் பொய்த்துப் போயுள்ளன. ஆனையிறவு, மணலாற்றுப் போரில் ஏற்பட்ட பெரும் உயிரிழப்பும், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் புலிகளை முற்றாக முடக்கிவிடும் எனக் கொழும்பு, டில்லி இராஜதந்திர வட்டாரங்கள் எண்ணியிருந்தன. இதனால் கொழும்பில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் ஒரேவழி' என பலமான குரல்கள் எழும்பின- இந்தியாவின் ஆதரவும் சிறிலங்காவிற்கு இருந்தது.

ஆனால், நிலைமை அவ்வாறில்லை என்பதனை விடுதலைப்புலிகள் மீண்டும் ஒருமுறை சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் உணர்த்தியுள்ளனர். 3000 துருப்பினரையும், நவீன டாங்கிகளையும் கொண்டு மேற்கொண்ட வன்னி விக்கிரம III நடவடிக்கையை எதுவித பயனுமில்லாமல் முடித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதில் இருந்தே புலிகள் அவர்களுக்குப் புகட்டியுள்ள பாடத்தின் கனதி தெரியவரும்.

இந்நிலையில், அரசியல் தீர்க்க தரிசனத்தை தலைகீழாக மாற்றிவிடும் அபாரசக்தி படைத்தவர்கள் புலிகள் என்ற 'புரன்ட்லைன்' கணிப்பீடு சரியானதே. இதேவேளை புலிகளின் இவ் அபார சக்திக்கு ஆயுத பலம் என்பதைவிட புலிகளின் மனோபலமும், அதன் தலைமைத்துவமுமே காரணம் என்பதில் கேள்விக்கே இடமில்லை.

# கரையோர மீன்பிடிப்பை ஊக்குவிக்கத் தீர்மானம்

(நமது நிருபர்)

சிறிலங்காவின் ராணுவ நடவடிக்கைகள் காரணமாக தொழில் வாய்ப்புகளை இழந்த கடற் தொழிலாளர்களை நாச்சிக்குடாப் பகுதியில் குடியமர்த்தி அவர்களை மீண்டும் தொழிலில் ஈடுபடச் செய்ய முயற்சிப்பது என தமிழீழ கடற்தொழிற் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கருத்தரங்கொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கருத்தரங்கு யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் தற்போதைய நிலையில் கரையோர மீன்பிடிப்பே சாத்தியப்படுவதனால் அதை ஊக்குவிப்பதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற் தொழிலாளர்களுக்கு வேண்டிய கட்டுமரங்களை உள்ளூரிலேயே தயாரிப்பது குறித்தும்,

இதுவரை காலமும் கட்டுமரங்கள் தயாரிப்பதற்காக அல்வீசியா, மலைவேம்பு போன்ற மரங்கள் கண்டிப் பகுதியில் இருந்தே பெறப்பட்டு வந்தன. இன்றைய சூழ்நிலையில் இது சாத்தியப்படாததால் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இலவசம் பஞ்சு மரங்களைப் பெற்று கட்டு மரங்களைத் தயாரிப்பதற்கும் கட்டுமரங்களை தயாரித்தல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானத்தை வனபரிபாலனத்திற்குப் பயன் படுத்துவதற்கும் இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாச்சிக்குடாப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்களை உடனடியாக சந்தைப் படுத்துவதில் போக்குவரத்துப் பிரச்சினைகள் காணப்படுவதால் மீன்களை பதப்படுத்தி விநியோகம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

ராஜதுரை சந்திரசேகரம் என்பவரது ஊழியர் அடையாள அட்டை உட்பட வேறு பல பொருள்கள் அடங்கிய கைப்பை ஒன்று கொம்படிப் பாதையில் க. வே. யோகநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## குழந்தைகளின் பிறப்புசான்றிதழ்

(கொழும்புத்துறை)

யாழ். அரசினர் மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்கள் உடன் பதிவு செய்து வழங்குவதற்குப் பத்தாயிரம் பத்திரங்கள் அடங்கிய பத்துப் புத்தகங்கள் கோமாரி கப்பலில் வரவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(24)

## நுவரெலியாவில் 20 ஏக்கர் காடு தீக்கிரை

(கண்டி)

நுவரெலியா சிக்கிலியா மலைக்காட்டில் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்ற பெருந்தீயினால் சுமார் இருபது ஏக்கர் அடர்ந்த காடுகள் முற்றாக எரிந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் தீ ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பது இதுவரை அறிவிக்கப்படாத போதும் நேற்று முன்தினம் வரை காடு எரிந்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

## எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக பெண்கள் தினத்தையொட்டி நாளை (8. 3. 92) இரவு 8.00 மணிக்கு தீவக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் நாவற்குழி சின்ன அருள் சனசமூக நிலைய அருகாமையில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உரையைத் தொடர்ந்து தீவக கலை, பண்பாட்டுக் கழகம் தீவககூட்டுறவாளர்கள் நாவற்குழி முகாம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பொதுநலவாய நாடுகளுக்குள் 'குற்றவாளிகளை' பரிமாற முயற்சிக்கப்படுகிறதாம்

[கொழும்பு]

முன்னுரிமை அடிப்படையில் ஏனைய பொதுநலவாய அமைப்பு நாடுகளுடன் 'குற்றவாளிகளை' பரிமாறிக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என நேற்று முந்தினம் அமைச்சரவை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கான திட்டங்கள் பொது நல நாடுகளின் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெற்ற பொது நலசட்டத்துறைஅமைச்சர்கள் மாநாட்டில் கொள்கையளவில் சிறிலங்கா இதனை ஆதரித்திருந்தது.

சிறிலங்காவும்இதற்குரியசட்டமொன்றை தயாரித்து வருகிறது. முக்கியமாக போதைப் பொருள் சம்பந்தமான குற்றச் சாட்டுகளில் சிறிலங்கா நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக காணப்பட்ட வெளிநாட்டவர் தொடர்பாகவே இந்தச் சட்டம் தயாரிக்கப்படுகிறது. என அவர் மேலும் தெரிவித்தார்.

## 1ஆம் பக்க தொடர்ச்சி

தன்.

இதே போன்றுதான் தமிழீழப் பெண்களாகிய எமது வாழ்வின் நிலையும் உள்ளது தமிழீழப்பெண்கள் என்பதால் எமது சொந்தநாட்டில்வாழும் உரிமையே மறுக்கப்படும்நிலைக்குள்ளாக்கப பட்டிருக்கின்றோம் அதேவேளை எமது சமூகத்திலேயே எமது உணர்வுகள் அலட்சியபபடுத்தப்பட்டு அவமதிக்கப்படுகின்றன உணர்வுகளும்மிதிக்கப்பட்டு உரிமைகளும் பறிக்கப்பட்டு உயிரற்ற சடமாக மதிக்கப்படும் அவலவாழ்வுக்கு முடிவு கட்ட வேண்டாமா? பட்டினியை எம்மால் பழக்கப்படுத்திக் கொள்ள முடியும் ஆனால் பாலியல் வன்முறைக்குட்படுத்தி எமது பெண்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை சகித்துக் கொண்டிருக்க முடியாது தடைக்கு மேல் தடைகளை போட்டு எமது தன்மானத்துக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் இனவாத அரசின் கனவுகளுக்குத் தீனி போடும் விதத்தில் சோம்பியிருக்காமல் நாம் உயிர்ப்புடன் எழுந்து கொள்ள வேண்டும் பட்டினிச்சாவுகளும் அரச அழிப்புகளும் எம்மைப் பலப்படுத்த வேண்டுமேயன்றி தளர்ந்து போகவிடக்கூடாது. பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் எம் மண்ணுக்கும் விடுதலை இல்லை என்பதில் தெளிவாக உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து தீரத்துடனும் தியாக உணர்வுடனும் போரிட்டு தமது ஆற்றலை ஆளுமையை பெண்கள் புலப்படுத்தி பெண்மையின் உண்மையை பெருவீரத்தை பறை சாற்றும் புரட்சிகரமான நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அனைத்துப் பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும்; தன்னம்பிக்கையுடன் எழுந்து கொள்ள வேண்டும்.

அரசின்ஆக்கிரமிப்புச்செயற்பாடுகளால் மட்டுமல்லாமல் எங்கள் சமூகத்தின் நடைமுறைகள் கைக்கொள்ளும் வழிமுறைகள் ஆகியவற்றாலும் நாம் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கைம்பெண்களின் கவலைகளையும், கண்ணீரையும் அலட்சியப் படுத்தி அவர்களை அலைக்கழிந்த வாழ்வு வாழ வைப்பதும். மனைவி இருக்கும் போதே கணவன் மறுமணம் செய்து, மனைவியை உடல், உளப் பாதிப்புக்களுக்கு ஆளாக்குவதும் திருமணம் செய்து இன்னுமொரு வீட்டுக்குப் போகும் பெண்களுக்கு கல்விக்காகப் பணம் செலவழிப்பது வீணென்று அவர்களின் கல்வி வாய்ப்பையே பாழாக்குவதும், மதக் கோட்பாடுகளை வலியுறுத்தி பெண்களை நிமிரவே விடாமல் அறியாமை இருளுக்குள் அவர்களை அமிழ்த்தி வைப்பதும் என்று எமதுசமூகத்தில் பெண்களுக்கு அநீதிகள் இன்னும் பலவாகும்.

பிறந்த நேரத்திலிருந்தே சீதனத்துக்காகப் பொருளும் பணமும் சேர்க்க வேண்டுமென்பதால் பெண் குழந்தையே வேண்டாமென ஒதுக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு வருகின்றோம். மதக்கோட்பாட்டு வலியுறுத்தலின் விளைவாக, 'அடங்கி ஒடுங்கி அடிமையாய் வாழ்வது எமது விதி என்று ஊமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம.

இந்த நாளில் தமிழீழப் பெண்களாகிய நாம் இனியும் இன்னமும் அறியாமைக்குள் முடங்கி, எமது உரிமைகளை இழந்து கொண்டே இருக்க மாட்டோம் என்றும், எம்மீது சிங்கள அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை வடிவங்களை உடைத்தெறிவதற்கான போரில் மட்டுமல்லாது சமூகத்தின் ஒடுக்குமுறைத் தத்துவங்களை தகர்க்கும் போராட்டத்திலும் எம்மை முழுமையாக ஈடுபடுத்தி, எமது விடுதலையை வென்றெடுப்போம் என உறுதி பூணுவோமாக.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

# கலை, பண்பாட்டு கழகத்தின் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை 8 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்தவார அமர்வில் டானியல் அன்ரனி அவர்கள் ''எனது கலை இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

இதேநேரம், இக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரிவுகளில் கலை இலக்கியத்துறை சார்ந்த கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன. வடமராட்சியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் மாலை 4.00 மணிக்கு ''பேணப்படவேண்டிய தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்கள்'' என்ற பொருளில் நவரத்தினம் (நவம்) அவர்களும், தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாலை 3.00 மணிக்கு அ. யேசுராசா அவர்கள் ''திரைப்பட இரசனை'' என்ற பொருளிலும் கருத்துரையாற்றவுள்ளனர்.

# ஷெல் தாக்குதலை கண்டித்து அராலி மக்கள் ஆர்ப்பாட்டம்

## அரச அதிபரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

அராலியிலும், அதனையடுத்துள்ள கிராமங்களிலும் வதியும் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு நேற்று யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தையும் முற்றுகையிட்டனர். குடியிருப்புகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் கண்மூடித்தனமான முறையில் மேற்கொள்ளப்படும் எறிகணைத்தாக்குதல்களைகண்டித்துகுரலெழுப்பிய இவர்கள் அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றையும் கையளித்துள்ளனர்

இராணுவ அத்துமீறல்களை உடனடியாக நிறுத்துமாறு ஆணையிட வேண்டுமென சிறிலங்கா ஜனாதிபதியை கேட்டுக் கொள்ளும் இம் மகஜரில் இத்தகைய கொடூரமான எறிகணை வீச்சுக்கள் தொடருமாயின் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் தஞ்சமடைய நேரும் என்று எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

தமிழர் நலன் காக்கும் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எறிகணைக்கு பலியானோர் மரணச் செலவுக்கு பணம்

(நமது நிருபர்)

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியானவர்களின் மரணச் செலவுக்காக இரண்டாயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்:

இராணுவ அட்டூழியங்களால் பலியாகும் பொதுமக்களின் மரணச் செலவிற்காக இரண்டாயிரம் ரூபாவை உடனடியாக வழங்க தனக்கு அதிகாரம் உண்டு எனக் கூறிய அவர் கடந்த புதன்கிழமை அராலிப்பகுதியில் பலியானவர்களின் குடும்ப அங்கத்தவர் தன்னுடன்தொடர்புகொண்டு இவ் உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (ச)

# மகளிர் முன்னணி வலிகாமம் பிரிவினரின் உலக மகளிர் தின மாபெரும் பொதுக்கூட்டம்

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பிரிவினர் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தவுள்ளனர். நாளை மாலை ஏழு மணியளவில் ஆரம்பமாகும் இந் நிகழ்ச்சியில் மகளிர் முன்னணிப் பிரதிநிதிகள் பலர் உரையாற்றவுள்ளனர்.

# சிறிலங்காவுடன் உறவை வலுவாக்க இந்தியா முடிவு

(டில்லி)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இருந்த பாரம்பரிய வரலாற்று ரீதியான தொடர்புகளுக்கு இணங்க இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தவும், ஸ்திரப்படுத்தவும் முடிவு செய்துள்ளோம் என்று இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெங்கட்ராமன் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர் இலங்கை அகதிகள் தமது விருப்பத்துடனேயே தாயகம் திரும்புகிறார்கள் என்றும், இலங்கை அரசாங்கம் வாக்குறுதிகள் அளித்ததனால் இவர்கள் தொடர்ந்தும் இலங்கை செல்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்க

சுன்னாகம் மத்திய சந்தைக்குள் இருந்து கடந்த நான்காம் திகதி தங்க நகையொன்றுகண்டெடுக்கப்பட்டுள்ளது உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி திருநெல்வேலியிலுள்ள தமிழீழ மீட்புநிதித் தொடர்பகத்தில் பெற்றுக் கொள்ளும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.


## சிறப்பு விற்பனை

08.03 92ஞாயிற்றுக்கிழமை யாழ்இந்துமகளிர்கல்லூரியில் நடைபெற இருக்கும் சர்வதேச மகளிர் தின விழாவில் இடம்பெறும் பொருட்காட்சியில் எமது சங்க கைத்தறிஉற்பத்திப் புடைவைகள் நியாயவிலையில் விற்பனைக்குண்டு.

| | |
|---|---|
| வேட்டி | சால்வை |
| பெற்சீற் | துவாய் |
| சேலை | பப்ளின் |

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவு சங்கம்.
இருபாலை வீதி,
கோண்டாவில்.
(2266)


# யாழ். பல்கலையில் சர்வதேச மகளிர்தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாலும் கொண்டாடப்படவுள்ளது. இது சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் உலகெங்கிலும் அடக்குமுறைகளுக்கு ஆளாகி துன்பப்படும் பெண்களின் விடுதலைக்கு உரமூட்டும் எழுச்சி நாளாக இந் நாள் அமைகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தவறிவிட்டது

செவ்வாய்க்கிழமை (3-3-92) அன்று மாலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில், ஊரியானுக்கும் உடையாகட்டுக்கும் இடையில் மஞ்சல் நிற பாடசாலைப் பை தவறிவிட்டது. பையில் உள்ள பொருட்கள். 26/3017 இலக்க லொறிப் புத்தகம், காப்புறுதி பற்றுச்சீட்டு, 93-ம் ஆண்டு அனுமதிச்சீட்டு அத்துடன் அடையாள அட்டை (2) இலக்கம் – 522362964V, 573351258V, என்பன தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள். ஈழநாதம் பணிமனையில் அல்லது க.இதயகுமார், இதய பவனம், டச்சு வீதி, உடுவில், சுன்னாகம் அல்லது சேனாதிராசா கடை 13 ம் கட்டை விஸ்வமடு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(2268)

## இன்று

செஞ்சிலுவைச் சங்க இரு வாகனங்களும் நான்கு பல நோ. கூ. சங்க லொறிகளும் ஒன்பது தொழிலாளர்களும் செல்கின்றனர்.

இன்று காலை எட்டு மணிக்கு இவ்வாகன அணி மானிப்பாய். சேந்தான்குளம், கீரிமலை வீதிகள் ஊடாக காங்கேசன்துறையை சென்றடையும். அங்கு இராணுவ காவலரணில் வைத்து நான்கு லொறிகளையும் இராணுவ சாரதிகள் பொறுப்பேற்பர். அங்கிருந்து உணவுக் களஞ்சியத்திற்குமேற்படிலொறிகளை கொண்டுசென்று பொருள்கள் நிரப்பப்பட்டபின்மீண்டும்காவலரணில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். பொருள்கள் ஏற்றப்பட்ட பின் லொறிகள் மீண்டும் கீரிமலை சேந்தான்குளம் வீதிவழியாக யாழ். நகரை வந்தடையும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ராணுவத்திற்கு

இழந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது; இதற்கு எடுத்துக் காட்டாக புலிகள் வந்துவிட்டார்கள் என்றதும், காவலரணை விட்டு முகாமிற்குள் ஓடும் அளவிற்கு இராணுவத்தினரின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளதையும் கூறலாம்.

அத்தோடு, புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்தினர் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கைகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், சிறிலங்கா அரசாங்கத்தரப்பும், இராணுவத்தரப்பும் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து தீவிர ஆலோசனை நடாத்தி வருவதாகவும் தெரிகிறது.

# பாடசாலை அபிவிருத்திசபை மாகாணசபையின் உரிமை

இன்று இங்கு நடைபெறும் விவாதம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மீறுகிறோம் என்பதையே குறிக்கும். பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைத்தல் மாகாணசபைகளின் உரிமை. இதனை இந்த புதிய திருத்தம் மீறுகிறது என பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. அஷ்ரப் தெரிவித்தார். பாடசாலை அபிவிருத்திச்சபைகள்தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதிகாரப்பரவல் அதிகம் அவசியமில்லாத பகுதிகளில் தான் மாகாணசபைகள் இயங்குகின்றன. வடக்கு கிழக்கு மக்கள் சமஷ்டிஅரசுமுறையை இன்றும் ஏற்று வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலை

இன்றுமுதல் சகல பாடசாலைகளிலும் வகுப்புகள் ஆரம்பமாகுமுன் குறைந்தது பதினைந்து நிமிடங்களாவது உடற்பயிற்சி அளிக்கப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## போக்கு வரத்து

யிட்டுள்ளன

ஊரடங்குச் சட்டம் காரணமாக பயணத்தை தொடர முடியாமல் வடபகுதியிலிருந்து ஓமந்தை, பரநட்டகல் பகுதிகளில் வந்து தங்கியிருந்த சுமார் ஆயிரம் பேர் நேற்று முன்தினம் வவுனியா வந்தனர் என்றும் வவுனியாவில் தங்கியிருந்தோர் தாண்டிக்குளம் ஊடாக வடபகுதிக்கு புறப்பட்டுச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர்

கலையான் அல்லது நித்தியா (சின்னப்பிள்ளை பாஸ்கரன் இத்தாவில்), வீரபாண்டியன் அல்லது யூரியன் (இம்மானுவேல் தெய்வேந்திரம் - குருநகர்), வேந்தன் அல்லது வின்சன்(அமிர்தநாதன் அலஸ்ரின்- செம்பியன் பற்று, முகாம்) வேங்கைகளது புகழுடல்கள் நேற்றுக் காலை மக்கள் அஞ்சலிக்காக சாவகச்சேரிப்பகுதில் வைக்கப்பட்டன. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டுவேங்கைகளுக்குதமது அஞ்சலியைச் செலுத்தினர். அங்கிருந்து நண்பகல் பன்னிரெண்டுமணியளவில் புகழுடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மானிப்பாயில் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்பட்டது

பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் வேங்கைகளுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அங்கிருந்து நண்பகல் 1.30ற்கு வேங்கைகள் மூவரினதும் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மாலையில் கலையானின் புகழுடல் தென்மராட்சி மாவீரர்துயிலும் இல்லத்திலும் வேந்தனின் புகழுடல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் வீரபாண்டியனின் புகழுடல் குருநகர் சனசமூக நிலையத்திலும் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்பட்டபின்னர் நடைபெற்ற அஞ்சலியுரையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் மயில்வாகனம்

ஓய்வுபெற்ற வன பரிபாலன அதிகாரி (A.C.F.) சோமசுந்தரம் மயில்வாகனம் 6-3-92 இல் சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் பொன்னம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும், பரிபூரணத்தின் (தங்கம்) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னார் கார்த்திகேசு, சொர்ணம் தம்பதிகளின் மூத்த மருமகனும் வீரசிங்கம், பாலசிங்கம ஆகியோரின் சகோதரரும், பரம்சோதி, தேவேந்திரன், யோகவதி, டாக்டர் திலகவதி, ஆகியோரின் அன்பு மைத்துனரும். குமாரசாமி, நாகேந்திரராசா. சகுந்தலா தேவி, டாக்டர் குகதாசன் ஆகியோரின் சகலனும், குமரேந்திரனின் அன்புப் பெரியையாவும் ஆவார்.

ஈமக்கிரியைகள் உரும்பராய் மேற்கு அம்மன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 10·00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேப்பையன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :
தர்மலிங்கம் பாலசுப்பிரமணியம்
(பெறாமகன் - ஆசிரியர்
வயாவிளான், ம. ம. வி.)

அம்மன் வீதி,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். (2669)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.